இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25.05.2026

# என்ன சி.எம்.சார்... சவுண்டயே காணோம்?

சூலூரில் ஒரு சிறுமி என்ன கதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இதைப் பார்த்த பிறகும் முதலமைச்சர் விஜய்க்கு சூடு, சொரணை வரவில்லையா? உடனே போயிருக்க வேண்டாமா? அந்தக் குடும்பத்தையும் சென்னைக்கு வரச் சொல்லித்தான் பார்க்கப் போகிறாரா?

தி.மு.க. ஆட்சியின் போது என்னவெல்லாம் பேசினார் விஜய்? **"நீங்க ஒழுங்கா ஆட்சி நடத்தி இருந்தால் பெண்கள் பாதுகாப்பு ஒழுங்கா இருந்திருக்கும். சட்டம் ஒழுங்கு ஒழுங்கா இருந்திருக்கும். பச்சை புள்ளைங்க.. படிக்கிற புள்ளைங்க... சின்னப் பொண்ணுங்க... வீட்டுல இருக்கிற பொண்ணுங்க... வேலைக்கு போகிற பொண்ணுங்க... இதுங்க எல்லாருக்கும் நடக்கிற கொடுமைகளை சொல்ல முடியாது சார்"** என்று சொன்னீர்களே விஜய்? இப்போது என்ன நடக்கிறது உங்களது ஆட்சியில்?

கொடுமைகள், கொடுமைகள். கொலைகள், கொலைகள். கொள்ளைகள், கொள்ளைகள். பாலியல் வன்முறைகள், இதுதான் நடக்கிறது. 12 நாளில் நூற்றுக்கணக்கான சம்பவங்கள். உள்துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் அதை வைத்து என்ன செய்து கொண்டு இருக்கிறார். உள்துறை என்றால் என்ன என்றாவது தெரியுமா அவருக்கு?

சூலூரில் வேதனையோடு பேசும் ஒரு பெண் சொல்கிறார். **"முதலமைச்சர் விஜய் ஆக்ஷன் எடுக்கனும். உங்களை ஆக்ஷன் ஹீரோன்னு நினைச்சுதான் வோட்டுப் போட்டோம்"** என்கிறார். அவரைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. விஜய் படத்தில் காட்டும் ஆக்ஷனைப் பார்த்து அதே போலத்தான் நிஜத்தில் இருப்பார் என்று நினைத்து வோட்டுப் போட்டிருக்கிறார் அந்தப் பெண். இப்படித்தான் பலரும் வாக்களித்துள்ளார்கள்.

தீ பற்றி எரியும் இடத்துக்குள் விஜய் போவார். மாட்டிக் கொண்டிருக்கும் அந்த ஒற்றைக் குழந்தையைத் தூக்கி வருவார். தன் மீது பற்றிய தீயைத் தட்டி விடுவார்... என்று இந்த நாட்டு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். இன்று தமிழ்நாடு என்ற மாநிலமே குற்றச் சம்பவங்கள் கோலோச்சும் மாநிலமாக மாறிக் கொண்டிருக்கிறது.

'இதோ நான் பொறுப்பேற்றுக் கொண்டேன்... டைம் ஸ்டார்ட் நவ்' என்றார் விஜய். குற்றவாளிகளின் கூடாரமாக ஆகி வருகிறது தமிழ்நாடு.

தி.மு.க. ஆட்சியின் போது மைக்கைப் பார்த்ததும் கத்திக் கொண்டு இருந்தாரே விஜய்? அந்த விஜய் எங்கே போனார்? **"சின்னப் பொண்ணு, டாய்லெட் வசதி இல்லாம காட்டுப் பக்கம் போயி ஒதுங்கினாங்க. என்ன ஆச்சு? உலகத்தை விட்டே போயிட்டாங்க. அதுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க? இந்தப் புள்ளைய உங்களால திருப்பித் தர முடியுமா?"** இப்படிக் கேட்டவர் விஜய். அவர் கேட்ட கேள்வியைத்தான் நாடு இப்போது அவரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

'இன்ஸ்ட்ராகிராம்' திறந்தாலே முதலமைச்சர் விஜய்யை பார்த்து பெண்களும், இளைஞர்களும் இப்போது கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நாக்கைப் பிடுங்குவது மாதிரி கேட்கிறார்கள். ஆனால் அவர் தனது நாக்கை சுருட்டிக் கொண்டு விட்டார்.

**'குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை' என்று இப்போது எக்ஸ் தளத்தில் பதிவு போடுகிறார் முதலமைச்சர் விஜய். ஆனால் அவரது உள்துறை என்ன செய்துள்ளது தெரியுமா? அந்தக் குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சித்துள்ளது.**

**'சிறுமியைக் கண்டுபிடித்துவிட்டோம். உயிரோட தான் இருக்காங்க' என்று முதலில் அந்தக் குடும்பத்துக்குச் சொல்லி இருக்கிறார்கள். பிறகுதான் உயிரோடு இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இதற்கு முதலமைச்சர் விஜய் என்ன சொல்லப் போகிறார்?**

'கடைக்குப் போகிறேன்' என்று (21 ஆம் தேதி) அனுப்பி வைக்கப்பட்ட சிறுமி அவர். காணவில்லை. அரைமணி நேரத்தில் அந்தக் குடும்பத்தினர் தேடுதலைத் தொடங்கி காவல்துறைக்கு புகார் கொடுக்கிறார்கள். 22 ஆம் தேதி இரவு கண்ணம்பாளையம் குளக்கரையோரம் உள்ள முட்புதரில் சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அருகில் இருந்த தென்னந்தோப்பில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார் சிறுமி. இதை அறிந்து ஆத்திரம் அடைந்த உறவினர்கள் சிங்காநல்லூர் மருத்துவமனை முன்பும், காவல் நிலையம் முன்பும் முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். சாலை மறியல் செய்தார்கள். சிறுமியின் உடலை வாங்க மாட்டோம் என்று பெற்றோரும் உறவினரும் சொன்னார்கள். இப்படி பொதுவெளியில் வெளிச்சம் ஆனபிறகு தான் காவல் துறை செயல்பட்டுள்ளது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். இந்தக் குற்றவாளிகளும் சிறுமியைத் தேடுவது போல நாடகம் ஆடி இருக்கிறார்கள். பின்னர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**'சிறுமி உயிரோடு இருக்கிறார்' என்று பெற்றோரிடம் சொன்னது யார்? அந்த போலீஸ் அதிகாரி யார்? அவர் மீது ஆக்ஷன் விஜய் நடவடிக்கை எடுப்பாரா?**

**விஜய் தொடங்கினாரே சிங்கப் படை. என்ன ஆனது? என்ன செய்து கொண்டு இருக்கிறது? சிதைத்துக் கொலை செய்யப்பட்டு இருப்பவர் நான்காம் வகுப்பு படிக்கும் பத்து வயதுச் சிறுமி. பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட பிறகு கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கு பொறுப்பேற்க வேண்டியது உள்துறையைக் கையில் வைத்திருக்கும் விஜய் பொறுப்பு அல்லவா?**

தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இத்தகைய குற்றச் சம்பவம் நடந்து, கொடூரமாய் ஒரு குழந்தை கொல்லப்பட்டது என்ற குற்ற உணர்ச்சியே இல்லாமல் காவல் துறை அதிகாரிகள் பேட்டி கொடுத்துள்ளார்கள். ஆட்சியாளர்கள் மீது இவர்களுக்கு எந்த பயமும் இல்லை என்பதைத்தான் அவர்களது அலட்சியமான பேட்டி காட்டுகிறது. பேட்டிக்கு முன்னதாக போலீஸ் அதிகாரிகள் குலுங்கி குலுக்கி வெடிச்சிரிப்பு சிரித்துக் கொண்டு இருந்த காட்சிகளை 'நியூஸ் தமிழ்' தொலைக்காட்சி ஒளிபரப்பியது. விஜய் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது என்பது இதுதானா?

விஜய் கேட்ட கேள்விதான் இப்போதும் நினைவுக்கு வருகிறது...

**"நீங்க எதுக்குங்க சார்?**

**உங்க ஆட்சி எதுக்குங்க சார்?**

**உங்களுக்கு சி.எம்.பதவி எதுக்குங்க சார்?"**



தென்காசி மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர் தி.மு. ராசேந்திரன் வெற்றி பெற்றார். அதற்கான நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் கடையநல்லூரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் பங்கேற்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். ம.தி.மு.க. வடக்கு மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன் வரவேற்றார். உடன் தி.மு.ராசேந்திரன் எம்.எல்.ஏ., தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் பொறுப்பாளர் செல்லத்துரை, முன்னாள் எம்.எல்.ஏ. சதன் திருமலை குமார், கழக நிர்வாகிகள் அப்பாஸ், பீரப்பா, ஆறுமுகச்சாமி உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பிரதமர் மோடியின் நிர்வாகத் திறமையின்மையால்

# நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் சீரழிவு!

## பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி குற்றச்சாட்டு!

பாட்னா, மே 25-

மோடியின் நிர்வாக திறமையின்மை யால் நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாகச் சீரழிந்துள்ளது என தேஜஸ்வி குற்றம்சாட்டியுள்ளார்.



பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், இன்று ரூபாயின் மதிப்பு மிக குறைந்த நிலையை அடைந்து, ஆசியாவிலேயே மிகவும் பலவீனமான நாணயமாக மாறியுள்ளதாக விமர்சித்துள்ளார். மோடியின் தலைமையில் ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருவது இது 8வது ஆண்டு என குறிப்பிட்டுள்ள தேஜஸ்வி, கடந்த 12 ஆண்டுகளில், ரூபாய் தனது மதிப்பில் பாதியை இழந்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களை தவறாக வழிநடத்தும் பிரதமர், இந்தியா உலகின் முன்னணி பொருளாதாரங்களில் ஒன்று என கூறுகிறார், ஆனால், அமெரிக்க டாலர்களில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பார்த்தால், வங்காள தேசத்தை விடவும் பின்தங்கி, உலக அளவில் இந்தியா 16வது இடத்தில் உள்ளது, தொலைநோக்கு பார்வையற்ற என்.டி.ஏ. அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளால், நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக சீரழிந்துள்ளததாக குற்றம் சாட்டியுள்ளார். நாட்டின் மிகவும் பின்தங்கிய மற்றும் ஏழ்மையான மாநிலமான பீகாரின் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளது, எல்.பி.ஜி. எரிவாயு, பெட்ரோல், டீசல், உரங்கள், விதைகள், கல்வி, மருந்து, நீர்ப்பாசனம் என அனைத்து பொருட்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன, ஆனால் இரட்டை எஞ்சின் என அழைக்கப்படும் என்.டி.ஏ. அரசாங்கத்திடம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான செயல் திட்டம் எதுவும் இல்லை எனவும் தேஜஸ்வி கடுமையாக விமர்சித்துள்ளார்.

### திருவண்ணாமலை மாநகரில்

# தூய்மை அருணை பணிகளை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

## மாநகரம் முழுவதும் கால்வாய் அடைப்புகளை நீக்க நடவடிக்கை!

திருவண்ணாமலை, மே 25-

திருவண்ணாமலை மாநகரில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாநகரம் முழுவதும் சமீபத்தில் பெய்த கோடை மழையில் ஏற்பட்ட கால்வாய் அடைப்புகளை நீக்க நடவடிக்கை எடுக்கவும், மரக்கன்றுகள் பராமரித்தலையும் தீவிரப்படுத்த ஆலோசனைகள் வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப் பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

24.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு, வார்டு எண்28, தண்டராம்பட்டு சாலையில் உள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் நடைபெறும் தூய்மைப் பணிகளையும்,

காலை 7.15மணிக்கு, வார்டு26 செங்கம் சாலை, இராமணாஸ்ரமம் எதிரில் கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கினார். காலை 7.30 மணிக்கு, வார்டு எண்.29 ஆதிஷேசன் நகரில் நடைபெறும் செடிகள் நிரம்பிய புதர்கள் மற்றும் கால்வாய் தூர்வரும் பணியினை பார்வையிட்டும்,

காலை 7.45 மணிக்கு, வார்டு எண்.24 வ.உ.சி. நகரில் நடைபெறும் கால்வாய் அடைப்பு தூய்மைப் பணிகள்,

காலை 8.00மணிக்கு, வார்டு எண்.14, கோபுரத் தெருவில் நடைபெறும் கால்வாய் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல்,

காலை 8.15மணிக்கு, வார்டு எண்.13, பெரியத் தெருவில் நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.1, பச்சையம்மன் கோயில் அருகில் நடைபெறும் தூய்மை அருணை பணி மற்றும் மரக்கன்றுகள் பராமரித்தலை ஆய்வு செய்தார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.2, அம்பேத்கர் தெருவில், சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக அடைபட்டிருந்த அனைத்துக் கால்வாய்களையும், அடைப்பு நீக்கும் பணியினை பார்வையிட்டும்,

காலை 9.00மணிக்கு, வார்டு எண்.9, தியாகி அண்ணாமலை நகரில் நடைபெற்ற தூய்மைப் பணிகளை பார்வையிட்டும்,

காலை 9.15மணிக்கு, வார்டு எண்.3, இராமவிட்டோபா நகரில் நடைபெற்ற மண்மேடுகள், கால்வாய் அடைப்புகள் நீக்கும் பணியினை பார்வையிட்டும்,

காலை 9.30மணிக்கு, வார்டு எண்.19, வேட்டவலம் சாலை, கீழ்நாத்தூர் பகுதியில், இரயில்வே கேட் அருகில் நடைபெறும் தூய்மைப் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ண மூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை. சுரேஷ், முபாரக், லயன். ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாடவீதி ஒருங்கிணைப்பாளர்கள் அருணை. வெங்கட், சினம்.பெருமாள், ஆர். கே.பி.பாஸ்கர், ஜீவரேகா விஜய ராஜ் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாநகரில், தூய்மை அருணை அமைப்பின் சார்பில், அம்பேத்கர் தெருவில் கால்வாய் அடைப்புகள் சரிசெய்வதை, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.